**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
(Chapter XXIII Code of Criminal Procedure)

**SC.No. 183/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.4/ P.W.4 | District | | மதுரை |
| Name | : | மருது | Calling | : | காவல் ஆய்வாளர் |
| Father Name | : | கருமலையான் | Age | : | 47 |
| Village | : | மதுரை | | : | |

Solemnly affirmed by Tr.A.Dineshkumar, Translator of this court in accordance with the provisions of Act X 1873, on the day of 06.03.2026

**As per circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- dated.21.02.2025 the identity of the witness verified with their identity card. Official ID card of the Witness verified.**

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மாட்டுத்தாவணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2024 ம் தேதி புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது , நகர காவல் நிலைய கு.எண்.186/2024 U/s.20 r/w.25(1)(a) of Arms Act ன்படி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரபாகரன் என்பவர் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.2 தான். பின்னிட்டு வழக்கு கோப்பினை பார்வைக்கு வைத்தார் . 29.07.2024 ம் தேதி வழக்கு கோப்பில் கைப்பற்றப்பட்ட சொத்து நீதிமன்றத்தில் RP No.214/2024 பெற்று, உதவி ஆய்வாளர் பிரபாகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு கோப்பினை எந்த தேதியில் , எத்தனை மணிக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 29.07.2024 ம் தேதி எடுத்தேன். காவல் உதவி ஆய்வாளர் மற்றும் சம்பவ இட சாட்சிகளை எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்றால் சம்பவ இட சாட்சிகளான சுரேஷ் மற்றும் குருசந்திரன் ஆகியோரை உதவி ஆய்வாளர் விசாரித்து முடித்துவிட்டதால் , நான் உதவி ஆய்வாளர் பிரபாகரன் என்பவரை 29.07.2024 ம் தேதி விசாரித்தேன். மேலும் குருசந்திரன் மற்றும் சுரேஷ் ஆகியோரை விசாரித்தேன் , ஆனால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை . நான் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்று வழக்கு கோப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இட சாட்சிகளை நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளரை விசாரித்தபோது , அவரது வாக்குமூலத்தில் எந்த தேதியில், எத்தனை மணிக்கு கோப்பினை என்வசம் ஒப்படைத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரியை கைது செய்ததாக சொல்லும் இடத்தில் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் சம்பவ இட சாட்சிகளை தவிர பொதுமக்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் பொதுமக்கள் ஆயுதத்தை காட்டியதால் பயந்து கொண்டு யாரும் விசாரணைக்கு வரவில்லை. அவ்வாறு சாட்சியம் அளிக்க மறுத்த நபர்களின் பெயர்களை குற்பிப்பிட்டுள்ளேனா என்றால் அவர்கள் பெயர் சொல்லாமலேயே மறுத்துவிட்டார்கள். சம்பவ இடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜர் , வரைபடம் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எதிரியை கைது செய்ததாக சொல்லும் இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் யாரால் தட்டச்சு செய்யப்பட்டு , printout எடுக்கப்பட்டது என்றால் நகர காவல் நிலைய பெண் தலைமைக்காவலர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டு printout எடுக்கப்பட்டது. அதனை உதவி ஆய்வாளரோ , சம்பவ இட சாட்சிகளோ குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிவாள் பொதுவாக அனைத்து கடைகளிலும் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல . அந்த அரிவாள் சட்டத்தால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களில் வராது என்றால் சரியல்ல . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பொதுமக்களோ , வேறு நபர்களோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் பயத்தில் அவர்கள் கொடுக்கவில்லை . நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் எந்தவித குற்றச்சம்பவமும் நடைபெறவில்லை என்றும் , அரசின் புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் , எதிரியிடமிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும் , எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து , நான் சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்க்ல செய்துள்ளேன் என்றும் , எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல . வீட்டில் படுத்திருந்த எதிரியை பொய்யாக அழைத்து வந்து பொய் வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*